**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

Calendar :

Miscellaneous :

Preliminary register :

Sessions :

Sessions Case No. 163 of 2019

Deposition of witness for :
:

Prosecution : PW- 1
Defence :
Court :

Name : Deepa

Father's Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of June 2022.**

முதல் விசாரணை:

நான் கடத்தூரில் குடியிருந்து வருகிறேன். எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள். என் கணவர் அரசு போக்குவரத்து பணிமனையில் ஓட்டுநராக பணி செய்து வருகிறார். நான் பொம்மிடியில் லேப் டெக்னிசியனாக சுமார் 7 மாதமாக சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். இதற்கு முன்பு பொம்மிடியில் உள்ள ராஜா மருத்துவமனையில் சுமார் 6 ஆண்டுகளாக லேப் டெக்னிசியனாக பணி செய்து வந்தேன். வழக்கின் 1, 2 எதிரிகள் பிரசாந் மற்றும் பாரதிராஜா ஆகியோர் எனக்கு தெரியும். அவர்கள் எனக்கு உறவினர்கள் தான் (எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை கு.வி.மு.சா பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது ). என்னுடன் உடன்பிறந்தவர்கள் ஒரு சகோதரர் பெயர் பெருமாள், மற்றும் சகோதரி வள்ளி ஆகியோர் மேல்பள்ளிப்பட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறார்கள். என் தம்பி பெருமாள் தீயணைப்பு துறையில் ஓட்டுநராக பணி செய்து வருகிறார். என் தாயார் அலமேலு என் சகோதரருடன் குடியிருந்து வருகிறார். என் தகப்பனார் கமலேசன் 2007ம் ஆண்டு இறந்துவிட்டார். என் தகப்பனாருக்கு பூர்வீக ஊர் பெரியதள்ளப்பாடி கிராமமாகும். என் தகப்பனார் இறந்துவிட்டதாலும் நாங்கள் அனைவரும் வெளியூரிலிருப்பதால் என் தகப்பனாருக்கு சொந்தமான பெரியதள்ளப்பாடியிலுள்ள பூர்வீக வீட்டில் எதிரிகள் பிரசாந், பாரதிராஜா மற்றும் அவரது பெற்றோர்கள் குடியிருந்து வருகிறார்கள். அந்த வீட்டை காலி செய்ய சொல்லி நாங்கள் சொல்லி வந்தோம் அவர்கள் காலி செய்யாமல் அங்கே இருந்து வந்தார்கள். 2019ம் ஆண்டு 4வது மாதம் ஒருநாள் என் தகப்பனாரின் அக்கா பேரன் இளையராஜா என்பவரின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காக நான், என் கணவர் தர்மன், தாயார் அலமேலு தங்கை வள்ளி மற்றும் தம்பி பெருமாள் ஆகியோர் பெரியதள்ளப்பாடி சென்றோம். ஏற்கனவே வீட்டை காலி செய்ய சொல்லி வந்ததில் முன் விரோதம் எதிரிகளுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் இருந்து வந்தது. அன்றைய தினம் இரவு 10.00 மணிக்கு மேல் எதிரிகள் பாரதிராஜா மற்றும் பிரசாந் என் தம்பியை துரத்திக்கொண்டு வந்தார்கள். நாங்கள் அனைவரும் திருமண வீட்டில் இருந்தோம். என் தம்பியை எதிரிகள் துரத்திச்சென்றதை பார்த்தோம். சிறிது தூரம் ஓடிய பிறகு எனது தம்பி கீழே விழுந்துவிட்டார். கீழே விழுந்த என் தம்பி எழுந்து சிறிது தூரம் நடந்து வந்தார். அவ்வாறு நடந்து வந்தபோது கண் பகுதி, வயிற்று பகுதி, தோள்ப்பட்டை, முதுகு ஆகிய பகுதிகளில் ரத்த காயங்கள் ஏற்பட்டு அவரது குடல் பகுதி வெளியே தெரிந்தது. குறிப்பாக எந்த எதிரி என் தம்பியை உடம்பின் எந்த பகுதியை தாக்கினார் என என்னால் சொல்ல இயலாது. எதிரிகள் என் தம்பியின் உடல் பகுதியில் காயங்கள் ஏற்படுத்தியதை நான் நேரடியாக பார்க்கவில்லை. அதன் பிறகு என் சகோதரரை ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வந்தோம். என் தம்பிக்கு உடலில் எந்த ஆயுதத்தால் காயங்கள் ஏற்பட்டது என்பது என்னால் சொல்ல இயலாது. அதன் பிறகு மேல் சிகிச்சைக்காக சேலம் மணிப்பால் தனியார் மருத்துவமணையில் என் சகோதரரை சிகிச்சைக்கு சேர்த்தேன். என் சகோதரர் சுமார் ஒரு மாத காலம் மருத்துவமணையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். சிகிச்சையிலிருந்தபோது சிங்காரப்பேட்டை போலீஸ்சார் மருத்துவமணைக்கு வந்தனர். என் தம்பி புகார் கொடுக்கும் நிலையில் இல்லை என்பதால் நான் எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். இதன்படி புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1. போலீசார் என்னை விசாரித்தனர். என் தம்பி அணிந்திருந்த துணி மணிகளை போலீசார் வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பறுதல் மகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கைப்பறுதல் மகஜர் அ.த.சா.ஆ.2.

குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் இல்லை என தெரிவிக்கப்பட்டது:

**ஒம்/-**

**திரு.எம்.அஷ்பாக் அஹமத், பி.ஏ.,பி.எல்.,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**